## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 30. ஸ்ரீசூர் தாஸ் மஹராஜ்

---

சங்கீதம் அத்வைத்த பாவத்தில் விரைவில் ப்ரஹ்மத்தை நம்முள் உணர்த்தும்.அதன் மூலம் கேட்போரின் விழிப்புணர்வும் பரிணமித்து அவர்களும் பாவ பக்தியில் அணுவளவேனும் ஈடுபடுவர்.அதனால் தான் சங்கீத நாதோபாசனை மிகவும் உயர்ந்த பக்தி சாதனம் ஆனது.இதையே கலியுக அன்பர்கள் இன்று வரைக் கைக்கொள்கின்றனர்.

மதுராவில் பிறந்த பிறவிக் குருடர் தான் சூர் தாஸ். மிகவும் இனிமையான தெய்வீக இசையின் மூலம் பக்தியைப் பரப்பிய மஹான் இவர்.அக்பரின் சபை வித்வான் தான்சேனும் வணங்கிய மஹான் இவர்.இவர் காலத்தில் தான் மீரா பாயும் வாழ்கிறார்.

***இவரது கவிதையை ஒரு நாட்டிய நிகழ்ச்சி மூலம் கேட்டுத் தான் விவேகானந்தருக்குக் கலைகள் மூலம் ஈஸ்வர தத்துவத்தை உணர முடியும் என்ற நம்பிக்கை வந்ததாம்.***

துளசி தாஸின் கவிதைகள் இவரது வார்த்தைகள் முன் ஒளி இழப்பன என்று புகழ்வர் வடதேச அன்பர்கள்.இவரது சங்கீதம் கலந்த பல பஜனைப்பாடல்கள் ஈஸ்வர பக்தியையும் எளிய ஆன்மீகக் கருத்துக்களையும் மக்களிடையே பரவின, மாற்றங்களைச் சமூஹத்தில் ஏற்படுத்தின.க்ருஷ்ணரின் தோழர் அக்ரூரரின் மறு அவதாரம் இவர் என்பது வழக்கு.

அதன் வாசனையால் மதுராவில் க்ருஷ்ண ஜென்ம பூமிக்கு அருகிலேயே சதா உட்கார்ந்து கொண்டு பாடுவார்.இவருள் விழிப்புணர்வில் சதா கண்ணன் தரிசனம் தருவான்.இதை உணர்ந்த அக்பர் தான்சேன் மூலம் டில்லிக்கு அவரை அழைத்து வந்து மரியாதை செய்தார்.

பின்னர் அவந்திபூரில் ஒரு இஸ்லாமிய அரசன் முன் இவர் கண்ணன் லீலைகளைப் பாடும் போது இவரது பக்தியும் ஒலி அதிர்வுகளும் ப்ரபஞ்சக் கட்டமைப்பில் இருக்கும் க்ருஷ்ண வடிவத்தை மக்கள் முன் கொண்டு வந்து காட்டியனவாம்.

தூய பாவ பக்தி கலந்த சங்கீதம் வெகுவிரைவில் வெகு எளிதில் அத்வைத்த உண்மையைத் தரும். ஹரி ஓம்!